# கனடாவில் குற்றச்சாட்டுகளும் உங்களுடைய குடியுரிமை அந்தஸ்தும்

கனேடிய குற்றவியல் நீதிமன்றமொன்று உங்களைக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்குமானால், அது கனேடாவில் உங்கள் குடிவரவு அந்தஸ்தைப் பாதிக்க முடியும். நீங்கள் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டால், உங்களுக்கு ஒரு குற்றவியல் பதிவு காணப்படும்.

நீதிமன்றமொன்று ஒரு குற்றம் தொடர்பில் நீங்கள் ஒரு குற்றவாளியெனத் தீர்ப்பளிப்பதற்கு இரண்டு வழிமுறைகள் மாத்திரமே காணப்படுகின்றன:

1. நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல். இது நீதிமன்றத்திலுள்ள ஒரு நீதிபதியிடம் நீங்கள் குற்றமிழைத்ததாக ஏற்றுக்கொள்வதைக் குறிக்கின்றது. குற்றத்தை ஒப்புக்கொள்ள முன்னர் நீங்கள் எப்போதும் சட்ட ஆலோசனை பெறுவது அவசியமாகும்.
2. நீங்கள் குற்றமற்றவர் என வாதிடுகிறீர்கள், ஆனால் விசாரணையொன்றின் பின்னர் நீங்கள் ஒரு குற்றவாளியென நீதிபதியொருவரினால் அல்லது ஒரு யூரியினால் தீர்மானிக்கப்படுதல்.

நீங்கள் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டால், உங்களுடைய குடிவரவு அந்தஸ்து பின்வரும் நிலைமைகளில் பாதிக்கப்பட முடியும்:

- உங்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள குற்றம், மற்றும்
- நீங்கள் பெறும் தண்டனை.

அத்துடன் சில சூழ்நிலைகளில், வெறுமனே ஒரு குற்றம் தொடர்பாக **குற்றம் சுமத்தப்படுவதே** அந்தஸ்தைப் பாதிக்க முடியும்.

## நான் குற்றஞ்சாட்டப்பட்டால் அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் எந்தவொரு நடவடிக்கை எடுக்க முன்னரும், உங்களுக்கு குற்றவியல் மற்றும் குடிவரவுச் சட்டம் தொடர்பில் சட்ட ஆலோசனை தேவைப்படும்.

உங்களால் அதற்கான செலவை ஏற்கமுடியாவிடில், ஒன்ராறியோ சட்ட உதவி நிறுவனத்தின் (Legal Aid Ontario) மூலமாக நீங்கள் உதவி பெறக்கூடியதாக இருக்கலாம்.

உடனடியாக வழக்கறிஞர் ஒருவரை அமர்த்தவும். நீதிமன்றத்தின் தீர்ப்பு உங்களுடைய குடியுரிமை அந்தஸ்திற்கு என்ன செய்யும் என்பதையிட்டு நீங்கள் கொண்டுள்ள கவலையைப் பற்றி உங்களுடைய வழக்கறிஞருக்கு சொல்லவும்.

## என்னுடைய குடியுரிமை அந்தஸ்திற்கு என்ன நடக்கும்?

நீங்கள் கனடிய பிரஜையாக இல்லாவிட்டால் சில குற்றங்களுக்காக உங்களுடைய குடியுரிமை அந்தஸ்தை நீங்கள் இழக்கக்கூடும். நீங்கள் இங்கு எவ்வளவு காலம் வாழ்ந்தீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல. குடிவரவு அதிகாரிகள் உங்களுக்கெதிராக வெளியேற்றும் உத்தரவை பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்.

குடிவரவு அதிகாரிகள் உங்களுக்கு எதிராக "அகற்றற் கட்டளை" ஒன்றைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இது உங்களைக் கனடாவிலிருந்து மற்றொரு நாட்டுக்கு அகற்றுவதற்கான ஒரு கட்டளையாகும்.

**நீங்கள் ஒரு கனடிய பிரஜையாக இருந்தால், நீங்கள் கனடிய பிரஜாவுரிமைக்கு அல்லது நிரந்தர குடியிருப்பாளர் அந்தஸ்திற்கு விண்ணப்பிக்கும்போது உண்மை அல்லாத எதையாவதை நீங்கள் சொல்லியிருந்தால் அல்லது தகவல்களை கொடுக்காமல் விட்டாலன்றி உங்களை கனடாவை விட்டு பலவந்தமாக வெளியேற்ற முடியாது.**

## என்னை கனடாவில் இருந்து அகற்றும்படி உத்தரவு இருந்தால் என்ன நடக்கும்?

உங்களுக்கெதிராக ஒரு அகற்றும்படியான உத்தரவு இருந்தால்:

- நீங்கள் கனடாவை விட்டு பலவந்தமாக அகற்றப்படலாம் மற்றும் திரும்பவும் கனடாவிற்கு வருவதற்கு குடிவரவு அதிகாரிகளிடம் இருந்து விசேட அனுமதி உங்களுக்கு தேவைப்படும்.
- கனடிய பிரஜைகள் அல்லாத உங்கள் குடும்ப அங்கத்தவர்களும் கனடாவை விட்டு வெளியேறவேண்டி வரலாம்.

## என்னுடைய குடியுரிமை அந்தஸ்தைப் பாதுகாத்து கனடாவில் தங்கியிருப்பதற்கு நான் என்ன செய்ய முடியும்?

உடனடியாக சட்ட ஆலோசனையைப் பெறவும். உங்களுக்கெதிராக அகற்றும்படியான உத்தரவு ஒன்று இருந்தால், குடிவரவு மற்றும் அகதி சபைக்கு (Immigration and Refugee Board) நீங்கள் மேன்முறையீடு செய்யக்கூடியதாக இருக்கலாம்.

➥2வது பக்கத்தில் இன்னும் உள்ளது➥

ஆனால் இதற்கான கால வரையறைகள் இருப்பதால் நீங்கள் விரைவாக செயல்பட வேண்டும்.

உங்களுக்கு ஒரு குற்றவியல் தீர்ப்பு வழங்கப்படுமானால், நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கான உரிமையும் உங்களுக்கு வழங்கப்படலாம். ஆனால் இவற்றிக்கும் கால வரையறைகள் இருப்பதால், சட்ட ஆலோசனையை உடனடியாக பெற வேண்டும்.

நீங்கள் ஒரு குற்றவியல் தண்டனையைப் பெற்றால், மன்னிப்பு என்று அழைக்கப்படும் பதிவு இடைநீக்கத்திற்காக நீங்கள் கனடாவின் பரோல் வாரியத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆனால் இதைச் செய்வதற்கு முன், ஏதேனும் தண்டப்பணங்களை முழுமையாகச் செலுத்துவது உட்பட நீதிமன்றம் உங்களுக்கு வழங்கிய தண்டனையை நீங்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

உங்கள் தண்டனையை பூர்த்திசெய்த பிறகு, நீங்கள் விண்ணப்பிக்க முன்பு இன்னும் சிறிது காலம் காத்திருக்க வேண்டும். இதற்காக ஒரு கட்டணமும் உண்டு.

பதிவு இடைநிறுத்தம் பற்றிய மேலதிக விவரங்களுக்கு, **www.canada.ca/en/parole-board/services/record-suspensions.html** ஐப் பாருங்கள்.

உங்களுக்கு பதிவு இடைநிறுத்தமொன்று கிடைக்குமானால், குடிவரவு அதிகாரிகள் உங்களை குறித்த குற்றம் தொடர்பில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படாதவராகக் கருதுதல் வேண்டும். ◇

**குற்றவியல் குற்றம் சுமத்தல்கள் உங்கள் குடிவரவு நிலையைப் பல வழிகளில் பாதிக்கலாம். பொதுவான தகவல்களை மட்டும், இந்தப்பங்கங்களில் நாம் தந்திருக்கிறோம். உங்களுடைய தனிப்பட்ட நிலைமைக்கேற்ப நீங்கள் சட்ட ஆலோசனையை பெற வேண்டும்.**

**இது ஓர் ஆங்கில மூலத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஒருவேளை முரண்பட்டிருந்தால், ஆங்கில பதிப்பைப் பார்க்கவும்.**

## உதவி பெறுவது எப்படி

**211 Ontario** (211 ஒன்ராறியோ) என்பது பல மொழிகளில் உதவி செய்யும் தகவல் மற்றும் பரிந்துரைக்கான ஒரு இலவச எண்ணாகும். இவர்கள் ஒரு நாளுக்கு 24 மணிநேரமும், ஒரு வாரத்திற்கு 7 நாட்களும் அழைப்புகளை ஏற்பார்கள்.

இவர்களால் பின்வருபவற்றுக்கு பதில்களை அளிக்க முடியும்:

- சட்ட உதவியை எங்கு பெறுவது, மற்றும்
- வேறு வகையான உதவிகளுக்குக் குடியேற்ற முகமை அல்லது சமுதாய முகமையை எவ்வாறு தொடர்பு கொள்வது.

211 ஒன்ராறியோவைத் தொடர்பு கொள்ள:

☎ தொலைபேசி......................... **211**
☎ செவிப்புலனற்றோருக்கான தொலைபேசி......................... **1-888-340-1001**
💻 **211Ontario.ca**

நீங்கள் உள்ளூர் நூலகம், சமுதாய சட்ட உதவியகம் அல்லது குற்றவியல் கடமை ஆலோசகர் அலுவலகத்தை தொடர்பு கொள்வதற்கும் முயற்சி செய்யலாம்.

உங்கள் பகுதியில் சேவை வழங்கும் சட்ட உதவியகம் அல்லது குற்றவியல் கடமை ஆலோசகர் அலுவலகத்தைக் கண்டறிய, நீங்கள் லீகல் எய்ட் ஒன்றாரியோவை (LAO) தொடர்பு கொள்ள முடியும்:

☎ கட்டணமற்ற தொலைபேசி......... **1-800-668-8258**
☎ பெல் ரிலே................................. **1-800-855-0511**
💻 **legalaid.on.ca**

CLEO ஆறு மொழிகள் ஆலோசனைக் குழுவுடன் (CLEO Six Languages Advisory Board) இணைந்து 10 அங்கத்துவ முகமைகளைக் கொண்ட CLEO (Community Legal Education Ontario/Education juridique communautaire Ontario) ஆல் உருவாக்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு ஒன்ராறியோ ரிறிலயம் அறக்கட்டளை (Ontario Trillium Foundation) மற்றும் ஒன்ராறியோ சட்ட உதவி நிறுவனமும் (Legal Aid Ontario) நிதி உதவி அளித்துள்ளன. இந்தப் பக்கங்களையும் பிற சட்டத் தகவல்களையும் பதிவிறக்க, **cleo.on.ca** ஐப் பார்வையிடவும். CLEO இன் **Steps to Justice** இணையத்தளத்தில் பொதுவான சட்டச் சிக்கல்கள் பற்றிய படிப்படியான தகவல்கள் உள்ளன. **stepstojustice.ca** ஐப் பார்வையிடவும்.